இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 183 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 01 – வெள்ளிக்கிழமை 13 பிப்ரவரி 2026 – வெளியீடு 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 183 : Thiruvalluvar Year - 2057 - Maasi 01 - Friday 13 February 2026 - Dak 16 Pages ₹ 5.00





தமிழ்நாட்டு மாணவர்கள் தரணியை வென்றிட

10,00,000 மடிக்கணினிகள் வழங்கும் திட்டம்

தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பயணத்தில் ஒருவரையும் பின்தங்க விடமாட்டோம் !!



வெல்வோம் ஒன்றாக!

செ.ம.தொ.இ./179/வரைகலை/2026


## பிரதமர் மோடி வெளிநாடுகளுக்குப் பயணம்: ரூ.462 கோடி செலவு!

புதுடெல்லி, பிப்.13–

பிரதமர் நரேந்திர மோடியின் வெளிநாடு பயணங்களுக்கு 2021 – 25 ஆண்டுகளில் ரூ.462 கோடி செலவாகியுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்ட வெளிநாட்டு பயணங்களுக்காக செலவுகள் குறித்த தகவல்கள் வெளியாகி உள்ளன. இதில், கடந்த 2021 முதல் 2025ம் ஆண்டு வரை சுமார் ரூ.462 கோடி செலவிடப்பட்டுள்ளது.

குறிப்பாக பிரதமர் மோடியின் அமெரிக்க சுற்றுப்பயணத்துக்கு மட்டும் ரூ.74 கோடி செலவிடப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணத்துக்காக சராசரியாக ஆண்டுக்கு ரூ.115 கோடி செலவிடப்படுகிறது என்றும் கடந்த 4 ஆண்டுகளில் பிரதமர் மோடியின் வெளி நாட்டு பயணத்துக்கு மட்டும் ரூ.420 கோடி செலவு என்றும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

2021 முதல் 2025 வரையிலான கால கட்டத்தில் சுமார் 43 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி, அமெரிக்கா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு தலா நான்கு முறை சென்றுள்ளார். அதைத் தொடர்ந்து பிரான்ஸ் நாட்டிற்கு மூன்று முறையும் இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா, ரஷ்யா மற்றும் பிரேசில் உள்ளிட்ட நாடுகளுக்கு இரண்டு முறையும் பிரதமர் மோடி சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி வெளிநாடுகளுக்கு சென்ற செலவு விவரங்களின் அடிப்படையில், 2025ல் பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றதற்கு அதிக செலவு செய்யப்பட்டுள்ளது. பிரான்ஸ் பயணத்துக்கு மட்டும் ரூ.25 கோடிக்கு அதிகமாக செலவிடப்பட்டுள்ளது. பிரதமர் மோடியின் இரண்டாவது மிகவும் விலை உயர்ந்த பயணம் ஜூன் 2023ல் அமெரிக்கப் பயணமாகும். இதற்காக ரூ.22.8 கோடி செலவிடப்பட்டது. மூன்றாவது அதிகபட்ச செலவு செப்டம்பர் 2021ல் அமெரிக்க பயணத்தின் போது பதிவு செய்யப்பட்டது, இதற்காக ரூ.19.6 கோடி செலவிடப்பட்டது.

## தொழில்முனைவோர்தம் வளர்ச்சியே ‘திராவிடமாடல்’ ஆட்சியின் மகிழ்ச்சி!

## இணைந்தே பயணிப்போம்! வெல்வோம் ஒன்றாக!

# தமிழ்நாட்டை நோக்கி அதிக முதலீட்டாளர்களை அழைத்து வாரீர்!

### சென்னை – புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

**சென்னை, பிப்.13-**

**சென்னையில் நடைபெற்ற, “புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில்” முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில், “தொழில்முனைவோர்தம் வளர்ச்சியே ‘திராவிடமாடல்’ ஆட்சியின் மகிழ்ச்சி” என்றும் “இணைந்தே பயணிப்போம்! வெல்வோம் ஒன்றாக!” என்றும் “தமிழ்நாட்டை நோக்கி அதிக முதலீட்டாளர்களை அழைத்து வாரீர்” என்றும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.2.2026) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), ஆற்றிய உரை வருமாறு:-

திராவிட மாடல் என்றால், வளர்ச்சிக்கான மாடல்! திராவிட மாடல் என்றால் Result கொடுக்கக்கூடிய மாடல்! திராவிட மாடல் என்றால், மக்கள் நலனுக்காக இருக்கக்கூடிய மாடல்! இதை எல்லாம் உலகுக்கு எடுத்துச் சொல்லக்கூடிய மாநாடுதான், இந்த செயலாக்க மாநாடு!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.2.2026) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் சென்னையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செயலாக்க மாநாட்டில் (Conversion Conclave), 36,968 கோடி ரூபாய் முதலீட்டில் 60,823 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 71 புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, 31,934 கோடி ரூபாய் முதலீட்டில் 82,664 நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் 52 முடிவுற்ற திட்டங்களைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், முனைவர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மாநில திட்டக் குழுவின் செயல் துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ. ஜெயரஞ்சன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, ஓம்ரான் ஹெல்த்கேர் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டாகுடோ ஐவானகா, B.I.G. Tech நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் ராஜு பாண்டியன், நார் பிரெம்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மார்கஸ் பெர், பாரத் பயோ டெக் நிறுவனத்தின் செயல் தலைவர் கிருஷ்ணா எல்லா, டாபர் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் மோகித் மல்கோத்ரா, தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்து சொல்ல வேண்டும் என்று சொன்னால், பொறுத்துக் கொள்ள முடியாத ஒரு சிலருக்கு எங்களுடைய செயலின் மூலம் பதில் சொல்லும் மாநாடுதான் இந்த செயலாக்க மாநாடு!

தொழில்துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்ன ஒவ்வொரு Dataவும், எங்களை விமர்சனம் செய்தவர்களுக்கான பதில் அதுதான்! இங்கே அவர் சொன்ன ஒவ்வொரு நம்பரும், எங்கள் Teamக்கான ஐந்து வருட கடுமையான உழைப்பிற்கான நம்பர். தொழில் துறையில் நாங்கள் செய்திருக்கக் கூடிய ரெக்கார்டை அடித்துச் சொல்கிறேன் அடுத்து, நாங்கள் வந்துதான் பீட் செய்யப் போகிறோம். இது உறுதி!

**இந்த மாநாடு – சாதனை சொல்கின்ற மாநாடு!**

இன்றைக்கு இந்த மாநாட்டில் மட்டும் 52 கம்பெனிகளுடைய திறப்பு விழா! 71 கம்பெனிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா! 2 புதிய கம்பெனிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தம்! என சாதனை சொல்கின்ற மாநாடாக இது நடைபெறுகிறது.

கடந்த 2021முதல்நாங்கள்செய்த பணிகளை எல்லாம் மேடை போட்டு சொல்லியிருக்கிறோம். இங்கே வந்திருக்கக்கூடிய ஊடக நண்பர்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்ள அன்போடு விரும்புவது,


**தொடர்ச்சி 2ஆம் பக்கம்**


## 140 கோடி இந்தியர்களை

# டிரம்பிடம் சரணடைய வைத்த மோடி!

### மக்களவையில் ராகுல்காந்தி கடும் விமர்சனம்!

**புதுடெல்லி, பிப்.13-**

**இந்தியா - அமெரிக்கா ஒப்பந்தம் மூலம் பாரத மாதாவை அரசு விற்றுவிட்டது. 140 கோடி இந்தியர்களை டிரம்ப்பிடம் மோடி சரண் அடைய வைத்துவிட்டார் என்று மக்களவையில் ராகுல் காந்தி குற்றம்சாட்டினார். மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதத்தில் பங்கேற்று எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி நேற்று பேசியதாவது:-**

இந்தியா – அமெரிக்க இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் மூலம் அரசாங்கம் பாரத மாதாவை விற்று விட்டது.

இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டு விவசாயிகளின் நலன்கள் சமரசம் செய்யப்பட்டு மொத்தமாக சரண் அடைந்து விட்டனர்.

பிரதமர் மோடியும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவலும் சிறிது காலத்திற்கு முன்பு போர் சகாப்தம் முடிந்து விட்டது என்று கூறினர். ஆனால் உண்மையில், நாம் போர் சகாப்தத்திற்குள் நகர்கிறோம். உக்ரைனில் போர் நடக்கிறது, காசாவில் போர் நடக்கிறது, மத்திய கிழக்கில் போர் நடந்து வருகிறது, ஈரானில் போர் அச்சுறுத்தல் உள்ளது. நம்மிடம் இன்னும் ஆபரேஷன் சிந்தூர் உள்ளது. நாம் ஒரு ஆபத்தான உலகத்திற்குள் நகர்கிறோம். நமது பலங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும், மேலும் நமது நாட்டின் மைய பலம் நமது மக்கள்தான். நாட்டின் மக்கள்,



தரவு, உணவு வழங்கல் மற்றும் எரிசக்தி அமைப்பைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

**உங்கள் ஊழியர்கள் போல் பேசக் கூடாது!**

உண்மையிலேயே இந்தியா கூட்டணி அரசு இப்போது இருந்து, அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நடத்தியிருந்தால், அது அதிபர் டிரம்பிடம் அவர் இந்தியாவை சமமாக நடத்த வேண்டும் என்று கூறியிருக்கும். இந்த சமன்பாட்டில் மிக முக்கியமான சொத்து இந்திய தரவுகள் என்பதை நாங்கள் (டிரம்பிடம்) முதலில் கூறுவோம். அமெரிக்கா டாலரைப் பாதுகாக்க விரும்பினால், இந்திய தரவு மிகப்பெரிய சொத்து என்பதை அது அங்கீகரிக்க வேண்டும். இரண்டாவதாக, நீங்கள் அதை அணுக விரும்பினால், நீங்கள் எங்களுடன் சமமாகப் பேசுவீர்கள், நாங்கள் உங்கள் ஊழியர்கள் போல் எங்களுடன் பேசக் கூடாது என்று நாம் அதிபர் டிரம்பிடம் கூறுவோம்

இந்தியா கூட்டணி அரசாங்கம் இந்தியாவின் எரிசக்தி பாதுகாப்பு குறித்து பேரம் பேச முடியாது. நாங்கள் எங்கள் எரிசக்தி பாதுகாப்பைப் பாதுகாக்கப் போகிறோம் என்றும் டிரம்பிடம் கூறியிருக்கும். மூன்றாவது விஷயம், உங்களிடம் விவசாய வளம் இருப்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம், நீங்கள் விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும், ஆனால் நாங்கள் எங்கள் விவசாயிகளையும் பாதுகாப்போம் என்று டிரம்பிடம் கூறியிருப்போம். இந்தியா கூட்டணி அரசாங்கம் தகவல்கள் நமது மிகப்பெரிய பலம் என்று கூறும். இப்போது நாம் பேசுவோம். சமமாக பேச்சுவார்த்தைக்கு அங்கு செல்வோம். நாங்கள் பாகிஸ்தானுக்கு சமமாக இருக்க மாட்டோம். பாகிஸ்தான் ராணுவத் தலைவர் அவருடன் காலை உணவு


**தொடர்ச்சி 3ஆம் பக்கம்**


## ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோதப் போக்கு!

### தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்!

*சென்னை, பிப்.12-*

*நாடு முழுவதும் ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ள தொழிலாளர் விரோத 4 சட்ட தொகுப்புகளை திரும்பப் பெற வேண்டும் என்பன உட்பட 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம், சாலை மறியல், ஆர்ப்பாட்டம் உள்ளிட்டவை நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொழிற்சங்கங்களின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.*

*சென்னை, அண்ணாசாலை தாராப்பூர் டவர் அருகில், ஒன்றிய அரசை கண்டித்து INTUC, AITUC, HMS, CITU உள்ளிட்ட 10 தொழிற்சங்கங்கள் இணைந்து சாலை மறியலில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில், வி.பி.ஜி ராம் ஜி சட்டத்தை ரத்து செய்து, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை மீண்டும் பழையபடி அமல்படுத்த வேண்டும் என முழக்கமிட்டனர்.*

*மேலும், அமெரிக்காவுடனான இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தை கைவிட வேண்டும், விவசாய விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்ய வேண்டும், விக்சித் பாரத் கிராமின் மிஷன் 2025 சட்டத்தை ரத்து செய்து, இளைஞர்களுக்கு முறையான வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் முழக்கங்கள் இட்டனர்.*